# தமிழ் நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044- 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை- 600 032.
முன்னிலை : முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)

*******

முறையீட்டு மனு எண். 182/நா/2017

ஆணை எண். 301/2017

நாள் : 26/12/2017

திருமதி அ. பாலாம்மாள்,
திண்டுக்கல். – முறையீட்டு மனுதாரர்

இயக்குநர்,
உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை,
சென்னை – 35. – எதிர் மனுதாரர்

திண்டுக்கல், முனிசிபல் காலனி, எண்.52–B, நெட்டுத் தெரு முகவரியில் வசிக்கும் திருமதி அ. பாலாம்மாள் அவர்களின் 13.09.2017 நாளிட்ட முறையீட்டு மனு, இம்முறைமன்ற நடுவத்தில் 15.09.2017 அன்று பெறப்பட்டு, 182/2017 எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீடு குறித்து உள்ளாட்சி நிதித்தணிக்கைத் துறையின் அறிக்கையினைப் பெற்று கீழ்காணும் ஆணை வெளியிடப்படுகிறது :-

## ஆணை

திண்டுக்கல், முனிசிபல் காலனி, எண்.52–B, நெட்டுத் தெரு முகவரியில் வசிக்கும் திருமதி அ. பாலாம்மாள் என்பவர் தனக்கு 2017–ஆம் ஆண்டு மார்ச் திங்களிலிருந்து செப்டம்பர் திங்கள் முடிய குடும்ப ஓய்வூதியம் வழங்கப்படவில்லை என முறையீடு செய்துள்ளார். 07.09.2017 நாளிட்ட உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை இயக்குநரின் கடித எண்.1360/ நஒவ/2017–ல் மனுதாரருக்கு வழங்கப்படவேண்டிய நிலுவை குடும்ப ஓய்வூதியத் தொகை ரூ.49,984/– 08.09.2017 நாளிட்ட காசோலை எண்.624029 மூலமாக வழங்கப்பட்டுள்ளது. அக்காசோலை 15.09.2017 அன்றே மனுதாரரால் காசாக்கப்பட்டுள்ளது. செப்டம்பர் திங்களுக்கான குடும்ப ஓய்வூதியமும் 28.09.2017 அன்று மனுதாரரின் வங்கி கணக்கில் வரவாக்கப்பட்டுள்ளது.

2. இந்நேர்வின் மனுதாரர் 70 அகவையிதனை அடைந்த மூத்த குடிமகள். மனுதாரரது அறியாமை மற்றும் வயது முதிர்வைப்பயன்படுத்தி மனு எழுதித் தரும் நபர் தவறாக வழிநடத்துகிறார். மனுவில் மனுதாரரின் கையொப்பத்தை மனு எழுதித் தருபவரே கையொப்பம் இட்டுள்ளார். 13.09.2017 நாளிட்ட படிவம் –1–ல் A.பாலாம்மாள் எனக் கையொப்பம் இட்டதை இது

உறுதி செய்கிறது. மனுதாரர் கணவர் பெயரின் முதல் எழுத்தை எப்பொழுதும் தன் பெயருக்கு முன் இடுவதில்லை. எனவே, மனு எழுதித் தருபவரே மனுதாரரின் கையொப்பத்தை இட்டுள்ளார் என உறுதியாகிறது. பிழைப்புக்காக மனு எழுதித் தருபவர் சட்டத்திற்குப் புறம்பான இதுபோன்ற செயல்களை இத்துடன் நிறுத்திக்கொள்ள வேண்டும் என இம்முறைமன்ற நடுவம் எச்சரிக்கிறது. மனுதாரரும் இதுபோன்ற நபர்களை நம்பி ஏமாறாமல் இருக்கவும் இம்முறைமன்ற நடுவம் அறிவுறுத்துகிறது.

**2017**– ஆம் ஆண்டு, டிசம்பர் திங்கள், **26**–ஆம் நாளன்று, என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் ஆணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளருக்காக

பெறுநர்

1. திருமதி அ. பாலாம்மாள்,
   52– பி, நெட்டுத் தெரு,
   முனிசிபல் காலனி,
   திண்டுக்கல்.

2. இயக்குநர்,
   **உள்ளாட்சி நிதித் தணிக்கை இயக்ககம்,**
   **ஒருங்கிணைந்த நிதித் துறை அலுவலக வளாகம்,**
   **4–வது தளம், நந்தனம்,**
   **சென்னை – 35.**

நகல் : முறைமன்ற நடுவரின் நேர்முக எழுத்தர்,
பிரிவு அலுவலர்(நிர்வாகம்)
**பேரூராட்சி பிரிவு –3,**
**இ.கோ. / உதிரிகள்**